

யாழ்ப்பாணம்–தென்மராட்சி
வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சின்னத்துரை சிவச்செல்வநேசன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து ஆக்கப்பெற்ற

# நினைவுச்சரம்

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சின்னத்துரை சிவச்செல்வநேசன் (சிந்தன்)

அவர்களின்

**சிவபதப்பேறு குறித்து ஆக்கப் பெற்ற**

# நினைவுச் சாரம்

# 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெற்றெடுத்த தந்தையே

பெருமையுற வளர்த்தெடுத்ததெய்வமே!

கல்வியுடன் ஒழுக்கம்

கைவரப் பெறச் செய்தீர்கள்

கற்பக விருட்சமாய் இருந்து

பயனளித்த எம்தெய்வமே

இக வாழ்வைத் துறந்து

பூலோகம் சென்றீரோ

இறைவன் திருவடியில் நித்திய

சாந்தி பெற வேண்டி உங்கள் பாதக்

கமலங்களில் இம்மலரைக்

காணிக்கையாக்குகின்றோம்



**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" - திருக்குறள்



அன்னை மடியில்
17.07.1976

ஆண்டவன் திருவடியில்
17.03.2023

அமரர்

# சின்னத்துரை சிவச்செல்வநேசன் (சிந்தன்)

## திதி நிர்ணயம்

ஆண்டு சுபகிருது ஆனதோர் பங்குனித் திங்கள்
பூண்டுவரும் அபரபக்க தசமித் திதி வேண்டியே
மாண்புடைய சிவச்செல்வநேசனும் புகழ் வரைந்து
ஆண்டவனின் சேவடியில் கலந்திட்ட நாளாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையைவேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாமம் தன்மையிரால்
கண்ணிற் பணிந்து கனிந்து.

## தேவாரம்

தந்தை தாயார் உடன் பிறந்தார்
தாயார் புத்திரராம் தாம் தாம் ஆரோ
வந்தவா றெங்கனே போமாறேதோ
மாயமாம் இதற் கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கென்று சொல்ல கேண்மித்த
திகழ் மதியும் வளரவும்திளைக்கும் செந்தீ
எந்தையாய்திரு நாமம் நமச்சிவாயவே
வென்றெழுவாய் இரு விசும்பிலிருக்கலாமே

## திருவாசகம்

கடையவனே எனைக் கருணையினர் கலந்த ஆட்கொண்ட
விடையவனே விட்டிருதி கண்டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே
கடையவனேதளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்'ட கனகத் திரள்மே
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அரவாநீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவது கண்டு மின்னுமிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடி சார்ந்த நாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்களை வேண்டிப் பாடிய துதிப்பாடல்

## திம்புருவில் பிள்ளையார் துதி

சீராரும் இயற்றாலைப் பதிமேவி அருள்வாயே
பேராரும் பெருங்கருணை நல்குகின்ற கணபதியே
தீராத பெரும்பக்தி சிரமிசை கொண்டானை
நீராரும் தலை வைகும் நிமலனடி சேர்ப்பாயே.

## சிட்டிவேரம் கண்ணகை அம்மன் துதி

சிட்டிவேரம் தலமுறைந்து அன்பர் குறை தீர்த்தருளும்
சுட்டிபுரம் கண்ணகியே நின்னடியே தினம் தொழுது
விட்டகலா பக்தியினால் விரைந்துன்னைத் தொழுதானை
அட்டகுண நாயகனின் அடிமலரில் சேர்ப்பாயே.

## ஞானியாவளவு முருகன் துதி

வேலொன்று கொண்டு நீ சூரனையே வென்றவனே
பாலன்பு தந்ததுவும் பக்தி செய்து பணிந்ததுவும்
காலன் அணுகிடுநாள் கருணை தரவேண்டுமென்றே
மேலென்று இருந்தானின் மெய்ப்பதம் சேர்ப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சின்னத்துரை சிவச்செல்வநேசன் அவர்களின்

# வாழ்க்கைச் சரிதம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1976 - 07 - 17 |  | 2023 - 03 - 17 |

கங்கையில் வெள்ளம் கரைபுரண்டோட
பொங்கும் அழகினைப் புலவர்கள் பாட
வங்கக் கடல் மிசை முத்தெனத் திகழும்
ஈழத்திருமணி நாட்டின் கண்ணே
சங்கத் தமிழ் நெறி சால்பினோடு
சைவநெறியும் தழைத்தோங்குகின்ற
சிங்கை யரசர் செங்கோலோச்சிய
யாழ்ப்பாணம் என்னும் பட்டினமாமே.

கண்ணென மிளிரும் யாழ்ப்பாணத்தில்
கற்பகதருவும் காண்டகு வனப்பும்
தண்புனல் வாவியில் தாமரை பூக்கும்
தெங்கு கமுகொடு கன்னலும் கூடவே
வண்ணமுற வளர் முக்கனிச் சோலைகள்
சாமரம் வீசும் செந்நெற் கழனிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணிவந்தருளும் இறை சந்நிதானங்கள்
முகிலினம் தவழும் வானுயர் கோபுரம்
தேனலர் சோலையில் குயிலினம்பாடும்
தெள்ளு தமிழ்க்கலை நர்த்தனமாடும்
வானவர் வந்து வளம் சொல்லிப்பாடும்
கீதங்கள் வந்து தென்றலில் சேரும்
ஞான ஒளிதரும் வித்தியா சாலைகள்
இன்னபிறவாம் சிறப்புகளோடு
மானத் தமிழினம் கூடிவாழ்ந்திடும்
தொல்பதியான தென்மராட்சியே!

பெரும்பதி அதனில் மருதமும் நெய்தலும்
கைத்தலம் பற்றும் கவின் பெறு ஊராம்
மருவாப் புகழுடைய வரணி இயற்றாலையில்
மனுநெறி தழுவி மாட்சிமையோடு
திருமணவாழ்வின் நிறைபுகளோடும்
அவனியில் வாழ்ந்த அருந்தவப் பேறாம்
திருமணி மார்பன் சிவச்செல்வநேசன்
அன்னவர் சரிதம் அமைதியாய்க் கேண்மின்.

இந்து சமுத்திரத்தின் முத்தாம் ஈழ நாட்டின் தென்மராட்சியின் வளம் செழிக்கும் வரணி இயற்றாலையில் இல்லறம் எனும் நல்லறம் நடாத்தி வந்த சின்னத்துரை சின்னம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனான சிவச்செல்வநேசன் 17-ம் திகதி 07 மாதம் 1976-ம் ஆண்டு அவதரித்தார். "நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்" வளர்ச்சி கண்டு வருகை, முத்தம், தாளம், சப்பாணி, சிற்றல், சிறுபறை, சிறிதோர் என வருகின்ற பருவங்கள் பத்தும் தாண்டி குறுநடை பயின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலை பேசியும் சிறுநகை செய்தும் குறும்புகள் புரிந்தும் குணம் பலம் பெற்றும் இருந்தார். பின்னர் அகரம், முதலாம் அட்சரம் பயின்று எண்ணும் எழுத்தும் கண்ணென போற்றி " ஆரம்பக் கல்வி முதல் கா.பொ.த.சாதாரண கல்வி வரை யா/வரணி மகா வித்தி யாலயத்தில் கல்வி பயின்றார். தொடர்ந்து உயர்தரக் கல்வியை யா/திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் பயின்றார்.

இயல்பாகவே தொழில்களில் ஆர்வம் கொண்ட இவர் உயர்தரத்தினை நிறைவு செய்த பின்னர் வரணிச் சந்தையில் பெற்றோரின் உதவியுடன் கடை வியாபாரம் நடாத்தி வந்தார். பின்னர் நாட்டின் நிலமை காரணமாக 1996-ம் ஆண்டு எமது நாட்டை விட்டு வெளிநாடு செல்ல முயற்சி செய்தார். பின்னர் முதன் முதலாக விமானத்தில் மலேசியா வரை சென்று அங்கிருந்து ஐரோப்பிய நாடு செல்வதற்காக கப்பலில் செல்ல வேண்டி ஏற்பட்டது. கப்பலில் ஐரோப்பிய நாடு செல்ல புறப்பட்ட போது இவருடைய கஷ்ட காலமோ தெரியவில்லை கப்பல் வெடித்து நீரில் மூழ்கி கவிழ்ந்து விட்டது. இதில் பல பேர்கள் இவ்விடத்தில் நீந்த தெரியாது இறந்தபோதிலும் குறிப்பிட்ட சிலர் நீந்தினர் அதில் இவரும் உயிரை கையில் பிடித்த வண்ணம் இத்தாலி வரை நீந்தி கரையை அடைந்தார். அங்கிருந்து உறவினர்களின் துணையுடன் சுவிஸ் நாட்டை சென்றடைந்தார். அங்கு 03 வருடங்களாக வாழ்ந்த போதிலும் அங்கு இருக்க முடியாத நிலமை ஏற்பட்டது. இவர் தானாகவே ஜேர்மன் நாட்டை சென்றடைந்தார். அங்கு அவருக்கான அங்கீகாரம் கிடைத்தது. அதன் பிறகு அவர் தனது சகோதரர்களுக்கு "கண்ணை இமை காப்பது போல" இருந்து சகல உதவிகளையும் செய்து வெளிநாட்டுக்கும் எடுத்து உதவி செய்தார். அதன் பின் தங்கையின் திருமண நிகழ்விற்கு சகோதரர் களுடன் சேர்ந்து சிறப்பாக நடாத்தி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் குடும்ப வாழ்க்கை

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கருணாநிதி, தேவமலர் தம்பதியினரின் அருந்தவப் புதல்வி கயல்விழியை 10.04.2004-ம் ஆண்டு திருமணம் புரிந்து மணநெறி வாழ்க்கையில் பிரவேசித்தார். இல்லற நெறியில் அன்றி பறவை போலும் குன்றில் தீபங்களாகவும் வையகம் போற்ற வாழ்ந்தனர். மன்மதனும் ரதியும் போல ஐக்கியம் பேணி அன்பினையும் பேணி இன்பம் துய்த்து இணையில்லா மகவுகள் இருவரையும் அவனியில் பெற்றனர். அந்த வகையில் சைந்தவி, சமீரா ஆகியோரை அருந்தவ புதல்விகளாகப் பெற்றார்.

அன்னார் புதல்விகளைப் பெற்று சீரும் சிறப்போடும் வாழ்ந்தார். "தந்தை மகற்காற்றும் நன்றி வையத்து முந்தியிருப்பச் செயல்" என்பதற் கிணங்க பிள்ளைகளின் உயர்வுக்காய் உழைத்த உத்தமன் ஆவார். எல்லோரிடமும் பழகுகின்ற சுபாவம் உடையவர். எப்போதும் எவரையும் புண்ணகையுடன் வரவேற்று அவர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வார். கலை ஞானமும் இலக்கிய அறிவும் கொண்டவர் இவர். ஜேர்மனியில் மணப்பந்தல் சேவையினை செய்து சிறிது காலத்திற்கு பின் மணப்பந்தல் சேவையை நிறுத்தி பின் Cooking staf ஆக தனது தொழிலை செய்து வந்தார். தனது இளைய சகோதரனான சிவச் சந்திரனின் திருமணத்திற்காக 19 வருடங்கள் கழித்து 2015-ம் ஆண்டு முதன் முறையாக இலங்கைக்கு வந்தார். தனது தாய், தந்தை ஏனைய சகோதரர்களுடனும் உறவினர்களுடனும் மகிழ்ச்சியாக இருந்து சிறப்பாக திருமணத்தை நடாத்தி நாடு சென்றார்.

குடும்ப வாழ்விலும் சிறப்பும், பெருமையும், உயர்வும், மகிழ்ச்சியும் பொங்க பிள்ளைகளுடன் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கையில் இவரின் மாமனாரின் மரணத்தை அறிந்து இரண்டாவது தடவையாக தனது நாடான இலங்கைக்கு குடும்பத்துடன் வந்து பத்தே நாட்களில் தனது கடமைகளை முடித்து சகோதர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்களுடன் அன்பாகவும் பணிவாகவும் தன்னடக்கத்துடனும் எல்லோரிடமும் பழகி நீண்ட நாட்கள் நிற்க முடியாது பிள்ளைகளின் படிப்பு கருதி திரும்பவும் நாடு சென்றார். திரும்பி செல்லும்போது உறவினர்களுக்கும் சகோதரர்களுக்கும் நான் திரும்பவும் இலங்கைக்கு குடும்பத்துடன் வந்து புதுவீடு செய்வதற்காக கூறி பல கனவுகளுடன் திரும்பச்சென்று அங்கு உன்னதமான இலக்கை அடைந்து சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கையில் அன்னார் தீராத நோய் வாய்ப்பட்டு படிப்படியாக இயலாமை நிலமைக்கு நோயினால் ஆட்கொள்ளப்பட்டார்.

குடும்ப வாழ்வில் சிறந்த தந்தையாய் குடும்பத் தலைவனாய் இருந்து எல்லோர் மனங்களிலும் நின்று நிழலாடிய அவர்கள் 17-ம் திகதி பங்குனி மாதம் 2023-ம் ஆண்டு அபரபக்க தசமி திதி பூர்வ புண்ணிய பயனால் பூவுலகு துறந்து பூதவுடல் நீர்த்து 46 வயதில் புகழுடம்பு எய்தினார்.

"இயன்றதைக் கொடுத்திடு
இயம்புவதைச் சொல்லிடு
இன்பமுடன் வாழ்த்திடு
ஈன்றோரைப் பார்த்திடு
செய்ந்நன்றி செய்திடு
சொல்வாக்கு மாறாதே......"

– கவி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாடல்கள்

## மனைவி புலம்பல்

என்னவனே!

கட்டிய நாள் முதலாய் என்னை கலங்காது காத்தவரே
துன்பம் பல சூழ்ந்த போதும் துவண்டு விடாமல் காத்திரே
மக்கள் மருமகள் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி குழாவி
குணநலத்துடன் வாழ்வீர் என்றல்லோ நானிருந்தேன்
என்னை தவிக்கவிட்டு நீர் எங்கு சென்றீர் அப்பா?
நானென்ன பாவம் செய்தேனோ நானறியேன்
சில சமயம் படுக்கையிலே இருந்த போது
என்னை பக்குவமாய் பார்த்தீரே
சமையல் கூட செய்யவிடாது சமைத்தூட்டி விட்டீரே
வாழ்ந்த காலம் போதுமென்று வானுயர சென்றீரோ
நீண்ட துயில் கொண்டு என்னவரே எங்குசென்றீர்
வாழ்கை முடிந்தது அய்யா வாழுகின்றேன் உம்மை நினைத்து
ஆலமரம் வேரறுத்து அடியோடு சாய்ததனால்
பாதிவழி வாழ்கையில் தவிக்கிறேன் பாவி நான்
துணையிழந்த மானாக துவண்டு நான் போனேன்
அமாவாசை இருட்டாக ஆனாதையாய் எம் வாழ்வு
துடுப்பிழந்த படகாக தனியாகத் தவிக்க விட்டாய்
எத்திசையில் நான் செல்வேன் என்னவென்று நான்
சொல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள்கள் தவிப்பு

அன்புள்ள அப்பா!

நாங்கள் உங்களை எவ்வளவு இழந்து தவிக்கின்றோம் என்று தெரியுமா? அப்பா

ஏங்களால் அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. நீங்கள் இல்லாத வெற்றிடம் எங்கள் இதயத்தில் ஒரு ஓட்டை இருப்பது போல உணர்கிறோம்.

நீங்கள்தான் எங்கள் முதல் காதல், அப்பா ஆனாலும்
எங்கள் இதயங்களை உடைத்த முதல் மனிதன் நீங்கள் தான் அப்பா

நாங்கள் உங்களை ஆழமாக நேசிக்கின்றோம்.

உங்கள் நடத்தை, உங்கள் சிரிப்பு, உங்கள் உரத்த ஆளுமை மிகவும் பிடிக்கும் எங்களுக்கு.

நீங்கள் எங்களை உங்கள் இளவரசிகள் போல் நடத்தனீர்கள் அப்பா

எங்களுக்காக என்ன வேண்டுமானாலும் செய்தீர்கள்.

நானும், தங்கையும் உங்களை நன்றாக
நினைவில் வைத்துக்கொண்டு உங்களுக்கும், அம்மாவுக்கும் பெருமைசேர்ப்போம் அப்பா

நீங்கள் கண்ட கனவுகளை நனவாக்குவோம் அப்பா

நீங்கள் எங்கள் தாயை ஒரு ராணிபோல பார்த்துக்கொண்டீர்கள்.
நாங்களும் அவ்வாறே பார்த்துக் கொள்வோம், என்றும் அவருடன் கூடவே இருப்போம்.

நீங்கள் எங்களுக்கு ஒரு தந்தை மட்டுமல்ல நல்ல தோழனும் கூட.

உங்கள் முதுமைக்காலத்தில் ராஜாவைப்போல பார்த்துக் கொள்ள ஆசைப்பட்டோம்

எங்கள் ஆசையை ஏனோ நிராசையாக்கி விட்டீர்கள்
உடலால் இல்லாவிட்டாலும் மனதால் கூடவே
இருந்து எங்களை எப்போதும் வழிநடத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன்..

– உங்கள் இளவரசிகள்

**சைந்தவி, சமீரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Lieber Appa,

Oh, wie wir dich vermissen, können wir nicht mal in Worte fassen. Als würde ein Loch in unserem Herzen sein. Du warst unsere erste Liebe. Und doch bist du der erste Mann, der uns das Herz gebrochen hat, so wird es kein anderer Mensch schaffen. Wir lieben dich, deine Art, dein Lachen, deine laute Persönlichkeit. Du hast uns wie deine Prinzessinnen behandelt und alles getan was nötig war, um uns glücklich zu machen. Samera und Shainthu werden dich in guter Erinnerung behalten und dich stolz machen. Alle Träume, die du hattest, werden wir für dich ausleben. Wir passen gut auf Amma auf und werden für sie immer da sein. Du hast unsere Mutter wie eine Königin behandelt und das gleiche werden wir tun. Für uns warst du nicht nur Papa, sondern auch ein König. Wir haben dir davon erzählt, wenn wir älter werden, dich mit Reichtum und Gold zu überschütten , wie ein König. Das tun wir lieber Appa. Guck nur zu Appa! Du wirst sehen, jeder wird es sehen! Wir beten für einen schönen Ort, wo du in Ruhe weiterleben kannst, behalte uns im Auge ! Unser Superheld bist du, beschütze uns weiterhin. Die Jahre mit dir waren unvergesslich und wir werden diese für immer mit uns tragen. Danke, dass du uns gezeigt hast, wie man ein aufrichtiges Leben führt, und auch wenn du nicht dabei sein wirst werden deine Tochter deine Ebenbilder sein und immer zu dir hinauf gucken.

Deine Kinder

**Samera & Shainthu**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை புலம்பல்

நேற்று வரை எம்மோடு பூத்திருந்த பூங்கொடியே
நீ உதிர்ந்து போன கதை சொல்வாயோ சிந்தா!
போற்றுவார் போற்றும் வகை நீயறிந்து பொய்மையிலா
வாழ்வுகண்ட உத்தமனே எந்தன் மைந்தா!
கூற்றனாய் வந்தநோய் உயிர்பறித்துப் போனதுவோ
ஊரே சோகத்தில் எம்முறவே எங்குசென்றாய் சிந்தா!
ஆற்றுவார் இல்லையடா அமரனாக அடைந்தாயே
நிலவு முகமெங்கே நித்திலமே வாராயோ சிந்தா....!

## பாசமிகு தாய் இரங்கல்

திருவருளை வேண்டித் தினம் தினம் தவமிருந்து
பெருவரமாய் பெற்றேன். பேறான என் செல்வமே!கருவிலே
சுமந்து கனவுகள் பல வளர்த்தேன்
கைப் புறத்தில் ஏந்தி முத்தம் சிந்தி வளர்ந்த சிந்தனே!
அம்மா! அம்மா! என்றழைத்து
ஆராத்தி செய்வாயாடா! சிந்தா!
கொலுவைத்து என்னை தெய்வமெனத் தொழுதாய்
வானடைந்தாய் தெய்வமாய் மகனே!
நான் உன்னைத் தொழ வைத்தாய்
விதி வரைந்த பாதையோ!
விடைகான முடியவில்லை சிந்தனே!
இடி வந்து விழுந்ததோடா! இன்னல் என்ன
வந்ததுவோ உந்தனுக்கு
ஏங்குகின்றேன் மைந்தா! என் சிந்தா!
உன்பிரிவு வாங்குதடா! என்னுயிரை
என் வாசல் வரமாட்டாயோ நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா சிவநேசன் (லண்டன்)

சிட்டாய்ப் பறந்து தினம் உழைத்தாய்
மொட்டாய் மலர்ந்து மனம் பரப்பினாய் சிந்தா!
கட்டழகனே! என் தம்பி சிந்தா!
விட்டகன்றாய் எங்களை! விம்மியழுகிறோம்!
விரைந்தோடி வருவாயோடா!
வானுயர்ந்த கோபுரமாய்
நீ உயர்ந்து நின்றாயடா சிந்தா!
மண்ணில் சரிந்த கதை தம்பி!
வானோங்கி நிற்குதடா!
பாதி வயதினிலே நீயும்
பறந்தோடிச் சென்றதெங்கே!
பகருவாயோ தம்பி சிந்தா!

## தங்கை சிவகுமாரி புலம்பல்

தாமரை வதனம் ஒளிவீசி
பௌர்ணமி நிலவாய் ஒளி தந்தாய்
பாசப்பினைப்பால் இணைந்த சிந்தா!
எப்பிறப்பில் காண்போமடா!
சிரித்துப் பேசி சினக்காமல் கதைசொல்லி
நம்பிக்கை வைக்கும் நளினப் பேச்செங்கே!
நாற்றிசையும் உந்தன் புகழ் பரவவிட்டு
சிந்தனே! நீயும் சிவகதி அடைந்தாயோ!
சிந்தை கலங்குதடா சிந்தா!
உந்தனைக் காணவென்று - தினம்
நெஞ்சம் துடிக்குதடா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி தவசீலன் (ஜேர்மனி)

அருகிருந்து என்றுமே அன்பு செய்தாய் அண்ணா!
சிந்தன் என்றே அண்ணா! நாடறியும்
உந்தன் கதையென்ன! ஏற்க மனம் மறுக்குதடா!
வானளந்த சிகரமே! மண்ணில் சரிந்தாயோ!
நீ வளர்ந்த கனவெல்லாம் கானலாய் போனதோடா!
பாராண்ட மன்னவனாய் பாரினிலே நீயிருந்து
வேரோடு சாய்ந்தாயே! சிந்தன் அண்ணா!
வேகுதடா எம் மனசு!
மீண்டுவர மாட்டாயோ!

## தம்பி - சிவச்சந்திரன்

கந்தனை வேண்டிக் காவடியெடுத்து
கண்ணகி அம்மனைக் கைதொழுது ஏற்றி
உந்தனைப் பறி கொடுத்தோம் அண்ணா!
சிந்தன்! சிந்தன் என்று அண்ணா!
ஊரே! உன் நாமம் உச்சரிக்குதடா!
நேரான பார்வையும் மிடுக்கான உன்தோற்றமும்
நாளும் எங்கள் கண்முன் விரியுதடா
பற்றியெரியுதடா நெஞ்சம் - அண்ணா
பதறுகின்றோம் பாவியராய்
வானிலிருந்து பாரடா அண்ணா
உன் சுற்றம் பதறுவதை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனன், மைத்துனி புலம்பல்

பண்பின் சிகரமே! கனிவுடன் பார்த்து இன்முகம் காட்டி
இனிமையாகப் பேசிப் பாசத்துடன் நடந்துகொள்ளும்
மைத்துனரே! அண்ணன் போல் எம்மையெல்லாம்
அரவணைத்து, கண்ணன் போல பல அறிவுரைகள்
கனிமொழிந்து
காலா காலத்தில் கஷ்டம் வரும்போது கைகொடுத்து
காத்து நின்ற காவலனே!

திருமண பந்தத்தில் எம்மை இணைத்து மைத்துனன் ஆனீரே.
நித்திலத்தில் நீர் நீத்து, நாள் முப்பத்தொன்று ஆனதுவோ?
மலை போல நம்பினோம் மறுபடியும் காண்போமென்று
மைத்துனர் நம்மைத் தவிக்கவிட்டு மறைந்து போனீரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.

## மருமக்கள் புலம்பல்

அன்பு மாமாவே,
நாங்கள் உங்களை மாமாவாக நினைத்ததில்லை, எம் தந்தை யாகவே எண்ணி வந்தோம்.
நீங்களும் அன்போடு எம்மை பிள்ளைகளாகவே வழி நடத்தினீர்கள்
பத்து நாட்கள் நின்று பத்து வருடமாய் பழகியது போல உணர்வினை தந்தீர்கள்.
உங்களை நினைத்து வெம்பி வெம்பி அழுகின்றோம்
எங்களிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல்
எவ்விடம் தான் சென்றீர்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் கூற யாருமில்லை எமக்கு அழுது புலம்புகின்றோம்
காரணமின்றிக் காலன் கவர்ந்ததேனோ?
கணப்பொழுதில் கனவுகளைக் கலைத்து
கண் மறைந்து சென்றதெங்கே?

ஆறுதல் தர வாருங்கள் மாமாவே!
"பிள்ளை பிள்ளை" என்று பாசத்துடன் அழைப்பீர்கள்
இரண்டு மாதங்களாய் உங்கள் குரல் கேட்காமல் தவிக்கின்றோம்
பாசத்துடன் அழைக்கின்றோம் மாமா! பறந்தோடி வாருங்கள்!
மாமாவே!

– மருமக்கள் –

**அனோயா, லோஜன், விதுர்சன்**

## சித்தப்பா புலம்பல்

சிந்தா! சிந்தா! என்று
தினமும் கூப்பிட்ட குரல் } (2)
எங்கே சிந்தா!
உன் குரல் வளம் } (2)
எங்கே சிந்தா?
எமது குலவிளக்காய் } (2)
புகழ் பூத்த பெருந்தகையாய்
எமது குலவிளக்காய் } (2)
புகழ் பூத்த பெருந்தகையாய்
மனிதரில் மாணிக்கமாய் } (2)
பார்போற்றிடும் உத்தமராய்
மனிதரில் மாணிக்கமாய் } (2)
பார்போற்றிடும் உத்தமராய்
பண்பின் சிகரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை விட்டு
எங்கு சென்றாய் சிந்தா! } (2)
சிந்தா நீ
பிரகாச நிலவாய் வானில் } (2)
தோன்றி
என் கனவுக்குள் நிக்காமல் } (2)
மனதை திருடிய உன்
அழகிய நினைவுகள் } (2)
என்னை வாட்டி வதைத்தது (2)
முத்துக்களான உன் புண்ணகை
என்னைக் கொன்று புதைத்ததே
அன்பே!

## பேரமக்கள் இதயக்குமுறல்

பெற்ற பிள்ளைகளாய் பேணி எமைக்காத்து
பெரும்பணிகள் செய்த பெருமையுள்ள தந்தையரே!
ஆற்றிய பணிகள் எம் அடிமனதில் தோன்றுதப்பா?
ஆறுதல் சொல்லிட ஆருமின்றித் தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

## மாமி புலம்பல்

பண்புடன் பணிவாய்ப் பேசி
பலகடமைகள் செய்திட்ட மருமகனே சிந்தா!
என் மகள் கரம்பிடித்து
இன்பமாய் என்றும் வாழ்ந்தீர்கள்
குலம் சிறக்க அல்லும் பகலும்
ஓடாய் உழைத்த நீங்கள்
என்மகள் உம்மக்களை தவிர்க்க விட்டு
பாதியில் சென்றது ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர் புலம்பல்

உன் துயரச் செய்தி கேட்டு
ஓடோடி வந்த – உன்
உற்றார், உறவினர், நண்பர்கள்
சிந்தா!
உன் துயரச் செய்தி கேட்டு
ஓடோடி வந்த – உன்
உற்றார், உறவினர், நண்பர்கள்
லண்டனிலும் சுவிஸிலும்
ஜேர்மனியிலும் பிரான்ஸிலும் – உனது
அண்ணா, அத்தான், மச்சாள்,
தம்பி, பொறாமக்களோடு
உறவோடு சேர்ந்த அண்ணாவும்
சேர்ந்து ஓடி வந்த
அன்பு பாசத்தை காட்டி
ஓடோடி வந்த எங்களை
ஏமாற்றி விட்டாய் சிந்தா!
எங்களை ஏமாற்றி விட்டாய் சிந்தா!
நீ இருப்பாய் என்று எல்லோரும் இருந்து
எதிர்பார்த்ததை விட
எங்களை விட்டு எங்கு சென்றாய்...

---

*Liebe Familie von Siva.*

*die schwere Erkrankung und der Tod*
*unseres Sivas hat uns sehr betroffen.*

*Er war der „Grenzsägmühle" immer eine*
*große Stütze und wir werden ihn vermissen*

*Er wird uns noch lange in Erinnerung*
*bleiben und wir trauern mit den*
*Angehörigen zusammen.*

*Unser herzliches Beileid*
*Alexander Drapa*
*Andreas und Rosi Drapa*
*Und Tobias Drapa*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Liebe Familie von Siva,
die schwere Erkrankung und der Tod
unseres Sivas hat uns sehr betroffen.

Er war der „Grenzsägmühle“ immer eine
große Stütze und wir werden ihn vermissen.

Er wird uns noch lange in Erinnerung
Bleiben und wir trauern mit den
Angehörigen zusammen.

Unser herzliches Beileid
Alexander Drapa
Andreas und Rosi Drapa
Und Tobias Drapa

---

der Tod von Siva macht uns sehr traurig. Unser herzliches Beileid.
Wir wünschen Euch viel Kraft in dieser schweren Zeit und behalten
Siva in guter
Erinnerung.

**Herzliche Grüße**
**Jacques & Natalie mit Familie**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Liebe Familie Sivaselvanesan,

Worte können kaum zum Ausdruck bringen, wie traurig uns dieser Verlust macht.
Siva war ein unersetzlicher, immer gut gelaunter Teil unseres Teams!
Du fehlst uns jetzt schon, lieber Siva.
Wir hoffen Ihre Familie findet die Kraft und den Halt,
diesen schweren Verlust zu überwinden.

In stiller Trauer
Heike, Jule, Carmen, Petra, Audi, Kati, Sonja, Julia, Jessi, Franzi,
Alexa, Sabine,Gabriel, Marion, Sarah, Lara, Romy mit Melissa

---

Liebe Kajal, liebe Familie Sivaselvanesan,

wir haben so gehofft, dass sich alles zum Guten wendet.
Die Nachricht vom Tod Ihres Mannes ist unendlich traurig!
Wir wünschen Ihren und Ihrer Familie viel Kraft.

**Alles gute Familie Bauernhonsel Recio**
**Tristan, Thomas - Belen**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
17 . 07 . 1976



மறைவு
17 . 03 . 2023

## அமரர் திரு.சின்னத்துரை சிவசெல்வனேசன்

அன்பே உருவான கருவில்
அவதரித்து இன்பம் தழைத்தோங்க
இன்முகத்தால் வரவேற்று பண்பை
பணிவை பாரபோற்றும் உழைப்பை
எமக்கு புரிய வைத்து அன்பாய் ஒரு கொடியின்
மலர்களாய் அவனியிலே இன்புற்று வாழ்வாங்கு
வாழ்ந்து இன்று காலன் உமை அழைத்திட எங்கு சென்றீர்
சென்ற வழி தேடுகிறோம் வருவீரோ
எம் மனக்குறை தீர்க்க.!

ஆத்மா சாந்தியடைய கண்ணீர் துளிகளைகாணிக்கை ஆக்குகிறோம்
ஆத்மா அமைதி பெறட்டும்
ஓம் சாந்தி: சாந்தி:சாந்தி::

இங்ஙனம்
ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாக சபை

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
17.07.1976



ஆண்டவன் அடியில்
17.03.2023

## அமரர். திரு. சிவசெல்வநேசன் சின்னத்துரை.

சிந்தனே! சிவாவே! தேடுகிறோம் உனையே!
வரணி தந்த நற்குணசீலனே!
பேரன்பு மிக்க பெருந்தகையனே!
ஏனிந்த அவசரம் எங்கு சென்றாய்?

உன் இதயத்தில் இணைந்த இனியவளையும்
அள்ளி அணைத்துத் தோளிற் சுமந்து
சீராட்டி வளர்த்த மகள்களையும்
நினைத்தாயா? ஏன் இந்த அவசரம்?

செய் தொழிலே தெய்வமெனக் கொள்பவனே.
அல்லும் பகலும் அயராது உழைத்து
அற்றார்க்கும் உற்றார்க்கும்
உதவிக்கரம் நீட்டும் உத்தமனே!
ஏன் இந்த அவசரம்?

சடுதியாய் வந்த கொடியவன் காலன்
துடி துடிக்க எடுத்துச் சென்றானே! – நீ
அன்போடு உறவாடிய உற்றவர் கலங்க
நண்பர்கள் கதற ஊரவர் தேம்ப

நீ புகுந்த மண் நுணாவில் மக்கள் வெதும்ப
நல்லவனே! எல்லோர் உள்ளத்திலும் நிலைத்தவனே! சிந்தனே தேடுகிறோம் உனை.

பொட்ஸ்கையில் உலகப்பந்திற்கு இணையாக எம் குழுவிற்கு ஊக்கம் கொடுத்து ஒன்றிணைத்தவனே!
உன் குடும்பத்தில் நாங்களும் ஒருவராகத் தேடுகிறோம் உனை.

**Pforzheim United Sport club**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் கவிதை

அறிவிற்கு புரிந்தாலும் மனம் ஏற்க மறுக்குதடா.



பிறப்பு - 17.07.1976

இறப்பு - 17.03.2023

சிந்தா சிந்தா சிந்தையிலே நீயிருந்தாய்!
அண்ணே அண்ணே என்று தினம் தினம் அழைப்பாயே!
ஆரத் தழுவிய ஆருயிர் நண்பனே!
உள்ளத்தோடு உறவாடி உற்ற தோழனாய் நீயிருந்தாய்!
நீ கதைத்த கதையெல்லாம் காதுகளில் ஒலிக்குதடா!
கனவா நினைவா என்று கண்கள் உனை தேடுதடா!
சிலகாலம் தூர இருந்து சிலகாலம் அருகில் வந்தாய்!
சகுதியாய் பழகி சட்டென்று விடைபெற்றாய்
அறிவிற்கு புரிந்தாலும் மனம் ஏற்க மறுக்குதடா!

அகால வேளையிலே
அண்ணே என்று அழைத்தாயே!
உன் உணர்வுகளை உணர்த்தி
உன் பாரத்தை இறக்கினாயோ!
மீண்டு வருவாயென்று நம்பிடவே
மீளாத் துயரில் ஆழ்த்தினாயே!
மீண்டு வருவாயென்று உன்
மகளுக்கு உறுதிமொழி அளித்தேனடா!
இன்று பதில் கூறமுடியாமல்
புரியாத புதிர் போல் விக்கித் தவிக்கின்றேனடா!
அறிவிற்கு புரிந்தாலும் மனம் ஏற்க மறுக்குதடா!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றேன்!!

# கண்ணீர் அஞ்சலி



அன்னைமடியில்
17.07.1976

இறைவனடியில்
17.03.2023

**<u>சின்னத்துரை சிவச்செல்வநேசன் (சிந்தன்)</u>**

நேற்று இருந்தவர் இன்றிருப்பதில்லை
இது காலத்தின் நியதி
வாழும் போது எப்படி வாழ்தோம் என்றில்லாது
தனக்கான பாதை வகுத்து
இன்று தன் பயணத்தை முடித்துக் கொண்ட
எங்கள் ஆலயத்தின் அடியாருக்கு
எங்கள் ஆலயத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்கேற்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் நிர்வாகம்
ஸ்ருட்கார்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
**17.07.1976**



**மறைவு**
**17.03.2023**

திரு
சின்னத்துரை சிவசெல்வநேசன்
(சிந்தன்)

வாசலில் உன் காலடியோசை கேட்கும் என்று
உன்னவளும் பிள்ளைகளும் பார்த்திருக்க
நோய்மீண்டு வருவாய் என தாய், தந்தை, உடன்பிறந்தோர்
காத்திருக்க நீ எங்கு சென்றாய் சிந்தா?

நேசத்தால் அனைவருக்கும் உறவானாய்
உயிர் பாசத்தால் நமக்கெல்லாம் உயர்வானாய்
நட்பின் மறுபெயர்தான் சிந்தன் என்பதோ?

கண்ணீர்ப்பூக்கள் தூவி
உன்னை வழியனுப்ப வந்தோம் சிந்தா
சென்றுவா-
மீளாத உறக்கத்தில் நீ - உன் நினைவுகள் சுமந்திங்கு நாம்

ஆண்டவன் காலடியில் அமைதி காண்பாய்

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி

~சுவிஸ் வரணி ஒன்றிய உறவுகள்

~சித்தப்பா ஆறுமுகம் குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
17.07.1976



ஆண்டவன் அடியில்
17.03.2023

## அமரர். திரு. சிவசெல்வநேசன் சின்னத்துரை.

சிந்தனே! சிவாவே! தேடுகிறோம் உனையே
வரணி தந்த நற்குணசீலனே!
பேரன்பு மிக்க பெருந்தகையனே!
ஏனிந்த அவசரம் எங்கு சென்றாய்?

உன் இதயத்தில் இணைந்த இனியவளையும்
அள்ளி அணைத்துத் தோளிற் சுமந்து
சீராட்டி வளர்த்த மகள்களையும்
நினைத்தாயா? ஏன் இந்த அவசரம்?

செய் தொழிலே தெய்வமெனக் கொள்பவனே
அல்லும் பகலும் அயராது உழைத்து
அற்றார்க்கும் உற்றார்க்கும்
உதவிக்கரம் நீட்டும் உத்தமனே!
ஏன் இந்த அவசரம்?

சடுதியாய் வந்த கொடியவன் காலன்
துடி துடிக்க எடுத்துச் சென்றானே! — நீ
அன்போடு உறவாடிய உற்றவர் கலங்க
நண்பர்கள் கதற ஊரவர் தேம்ப

நீ புகுந்த மண் நுணாவில் மக்கள் வெதும்ப
நல்லவனே! எல்லோர் உள்ளத்திலும் நிலைத்தவனே! சிந்தனே தேடுகிறோம் உனை.

பொட்ஸ்கையில் உலகப்பந்திற்கு இணையாக எம் குழுவிற்கு ஊக்கம் கொடுத்து ஒன்றிணைத்தவனே!
உன் குடும்பத்தில் நாங்களும் ஒருவராகத் தேடுகிறோம் உனை.

**Pforzheim United Sport club**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சின்னத்துரை + சின்னம்மா

- சிவநேசன் + நிறஞ்சா (லண்டன்)
  - தனுஜன், வர்சன், லக்சன்
- சிவச்செல்வநேசன் (ஜேர்மன்)
- சிவகுமாரி + பகீரதன்
  - அனோயா, லோயன், விதுர்சன்
- சிவச்சீலன் + கலைமதி (ஜேர்மனி)
  - சாருசன்
- சிவச்சந்திரன் (ஆசிரியர்) + அகிலா (ஆசிரியை)
  - அக்ஷிகா, கிஷானிகா

❄கருணாநிதி + தேமலர்

- கயல்விழி
- திருமாறன் + பிரதீபா
  - வருண்யன், யஷ்வின்

**சிவச்செல்வநேசன்** + கயல்விழி

- சைந்தவி, சமீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த இதய நன்றிகள்

எங்கள் அன்புத் தெய்வம் அமரர் **சின்னத்துரை சிவச்செல்வநேசன்** அவர்கள் காலமான செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல்கூறி எமது துயரைப்பகிர்ந்து கொண்டவர்கள், சகலவகையிலும் உதவியும் ஒத் தாசையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர் களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்ச லிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டவர் களுக்கும், கிரியைகளைத் திறம்படச் செய்த குருமார் களுக்கும், இவரது கிரிகையை திறம்பட ஒழுங் கமைப்புச் செய்த **திருவாளர் வேந்தன்** அவர்களுக்கும், இம்மலருக்கான அனுசரணை வழங்கிய **ஜெயா** அவர்களுக்கும், இம்மலரை ஆக்கி உதவிய ஆசிரியருக்கும் அழகுற அச்சிட்டு உதவிய **ஸ்ரீராம் பதிப்பகத்தினருக்கும்** எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**Herm**
**Sivaselvanesan Kayalvily.**

**Pflueger Str.45**
**75175 Pforzheim.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடைய எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்
வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
SriRaam Graphic & Printers Puttur Junction Meesalai.-0773707831